**அளவ்வ பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவ்வ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அளவ்வ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வக் லோடர் திருத்தத்திற்காக வட மேல் மகாண உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய ரூபா 298,292 ஆன பெறுமதி மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மஹராச்சிமுல்ல உப அலுவலகத்தில் ரூபா 243,105 பெறுமதியான கியூம் குழாய்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் தொடர்பில் பெறவேண்டிய நீதி மன்ற தண்டப்பணம் ரூபா 273,500 ஆன தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இயந்திரம், உபகரணம், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் என்பவற்றின் மொத்தம் ரூபா 13,956,799 ஆக இருந்ததுடன் கணக்கீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் ரூபா 16,371,573 ஆன தொகையாக இருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,808,828 ஆன வித்தியாசம் இருந்தது. | சகல இடங்களிலும் இயந்திரம் மற்றும் தளபாடங்கள் 2024 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்படும் அத்துடன் சபைக்கு சொந்தமான இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கணக்கு மீதி இதன்படி திருத்தப்படும். | உரிய வித்தியாசங்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் ஆவணங்கள் திருத்தப்பட்டு கணக்குகள் திருத்தப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நி.பி. 371 (3) | இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 78,385 ஆன முற்பணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப் பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் பெறப் பட்டிருக்கவில்லை. | மேற்குறிப்பிட்ட நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,171,327 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 36,877,344 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசுப் புத்தக மீதிக்கும் வங்கி கணக்கிணக்க் கூற்று மீதிக்கும் இடையில் ரூபா 232,536 ஆன வித்தியாசம் இருந்தது. | 2023 ஆகஸ்ட் 17 இல் நடைபெற்ற கணக்காய்வு குழுவில் கலந்துரையாடப் பட்டதுடன் இதன்ப வித்தியாசத்தை திருத்துவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டிருந்தது | கணக்குகளில் சரியாக சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரியும் வரியும் | 8,071 | 7,941 | 7,942 | 2,011 | 7,861 | 6,442 | 5,432 | 2,012 |
| வாடகை | 10,786 | 1,148 | 949 | 207 | 9,686 | 9,544 | 9,536 | 8 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,020 | 880 | 880 | - | 1,021 | 576 | 576 | - |
| ஏனைய வருமானம் | 89,437 | 37,083 | 37,083 | - | 61,253 | 44,084 | 44,084 | - |
| **மொத்தம்** | **109,314** | **47,052** | **46,854** | **2,218** | **79,821** | **60,646** | **59,628** | **2,020** |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் தொடக்கத்தில் இருந்த ரூபா 2,012,165 தொகையான பெறவேண்டிய வரி நிலுவைகள் ரூபா 960,800 தொகையான வரிகள் மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் தொடக்கத்தில் இருந்த ரூபா 7,941,255 பட்டியல் தொகையிலிருந்து ரூபா 1,049,684 சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வருமான நிலுவைகளை சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவை வருமானம் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பிரதேச சபையானது 2019 ஆம் ஆண்டிலிரந்து 2023 திசெம்பர் 31 வரை 68 கட்டிட இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதிலும் 05 கட்டிடங்கள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டு வரிவிதிக்கப் பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட 63 கட்டிடங்கள் மற்றும் வரி வீதங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் இணக்கச் சான்றிதழ் பெற்றிருந்து நபர் ஒருவர் வீத மதிப்புத் தொகையை திருத்துவதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு உரிய கட்டிட வரைபடத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வருமான வீதங்களை அதிகரிப்பதற்கு நடவடிகக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு வரையும் பிரதேச சபையால் பயன்படுத்தப்படுகின்ற 14 காணிகளை கையேற்பதற்கு ஒழுங்குகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | 1947 இன் 08 ஆம் இலக்க அரச காணிகளின் கட்டளையின் ம் மற்றும் கைதவிர்ப்பின் 2.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலீச குடியரசின இலங்கை சனநாயக சோசலீச குடியரசின் 1645(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் வாகனத்திற்கு பொறுப்பான சாரதி ஒவ்வொரு பயணமும் பூர்த்தியான பின்னர் உடனடியாக நாளாந்த ஓட்ட அட்டவணையில் சகல பதிவுகளும் கதியப்பட வேண்டிய போதிலும், 2023 ஒக்தோபர் 30 இல் நடாத்தப்பட்ட களப் பரிசோதனையின் போது அலவ்வ பிரதேச சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் 02 ரக்டர்களின் வாகன ஓட்ட அட்டவணைக்கும் வாகனங்களுடைய மைலோ மீட்டர்களிற்கும் இடையே ஆறையே 4,209 கிமீ மற்றும் 68 மீட்டர் மணித்தியாலங்கள் வித்தியாசம் இருந்தது. | மைலோ மீட்டருக்கும் ஓடிய தூரத்திற்கும் இடையில் இடைவெளி உள்ளதுடன் இதன்படி திருத்தங்கள் செய்யப்படும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. | மேற்குறிப்பிட்ட நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபைக்கு சொந்தமான ஆனால் இன்னொரு நிறுவனத்தின் பெயரில் பதியப்பட்டிருந்த 04 வாகனங்களின் உரிமையாண்மை மீளாய்வாண்டு இறுதிவரையும் சபை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | சபைக்கு மாற்றப்பட்டிருக்காத வாகனங்களை கையேற்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் (செயற்திட்ட துறைரீதியான திட்டம்) சபையானது 66 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் 25 செயற்திட்டங்கள் மாத்திரம் நிறை வேற்றப்பட்டிருந்தது. அந்த பூர்த்தியாக்கப்பட்டிருக்காத செயற்திட்டங்களிற்காக வருடாந்த பாதீட்டில் ரூபா 21,940,000 ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் உதிய பாதீட்டு தலைப்பின் கீழ் எதிர்காலத்தில் அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட பதீட்டு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சனைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது கழிக் கழிவுகளை அகற்றுவதற்கு நிலையான சுழற்சி முரைமை இல்லாத போதிலும். நிலையமொன்றாக இருந்த போதிலும் சபையானது கழிவுச் சுழற்சி நிலையத்தில் சேர்த்து வைப்பதற்கும் கழிவை பெறுவதற்கும் கழிவு முகாமைத்துவ தோண்டுதல் மூலம் அகற்றுவதற்கு பிரதேச சபை பகுதியில் கலி டிடரக்கை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் போது ஏறத்தாழ 87 கழி டிரக்குகள் உறிஞ்சுதலிற்கு உட்பட்டிருந்ததுடன் உறிஞ்சலின் பின்னர் அகற்றுதல்கள் செய்யப்பட்டுள்ளது. | சுற்றாடலை பாதுகாப்பதற்கு ஏற்றவாறு கழிவு அகற்றப்பட வேண்டும். |